ஒ

# திருக்குறள்
# வீட்டின்பால்

பதினான்கு சைவசித்தாந்த நூல்கட்கு ஆங்கிலத்தில்
மொழிபெயர்ப்பும் விரிவுரையும் ஆக்கியோராகிய


திரு - ஜே. எம். நல்லசாமி பிள்ளை

பி. ஏ., பி. எல்.,


அவர்களால் எழுதப்பட்டது

மலர் - 2


தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு நிலையம்

மலைச்சாலை, சென்னை

1923

விலை அணா [illegible]

# நூன்முகம்

அறம், பொருள், இன்பம் என்ற முச்சுவைகள் முப்பாலில் உலகோர்க்கீயப்பட் டிருக்கின்றன. இவைகளின் பயனாகிய வீடு என்னும் நூகாசகி யைத தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தமது திருக்குறளில் வெளிப்படையாகக் கூறவில்லை. புலன்கள தொழிற்பட்டிருககும நிலையை யார் தான் புகல வல்லுனர்? ஒருவர் அந்நிலையை எய்த லாமே யொழிய, அவ்வுணர்ச்சியை எடுததுரைக்க முடியுமோ? ஆயினும் நமது தேவர் அறம, பொருள, இன்பம என்பனவற்றிலே குறிப்பாக அனுபவ நிலையாகிய வீட்டைத தெளிவுறுத்தி யிருக்கிறார்.

அந்த நுணுக்கங்கள் எம் தந்தையாராகிய திரு. ஜே. எம. நல்லசாமி பிள்ளையவர்களால், ஒரு கட்டுரையிற் றொகுக்கப்பட்டு, 1905 - ம் ஆண்டு மேததிங்கள் 25-ம நாளன்று, மதுரைத தமிழ்ச சங்கததின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில், திரு. பொ. பாண்டித்துரைத் தேவ ரவர்கள் தலைமையின் கீழ் அரங்கேற்றப்பட்டது.

மனம், மொழி, மெய் முதலியவைகளால் புறம் பாகக் காட்டக்கூடாத வீட்டின்பாலைத் திரு

வள்ளுவர் தந்திலரென்று குறை கூறுபவர்கள், இக்கட்டுரையான் தங்கள் குறைவை நிறைவு செய்து கொள்வார்களாக. அதுவே நாம் கோரும் பயனாகும்.

நம் தமிழ் மொழியிற் பிறந்து பின் பல பிற மொழிகளுக்கு அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளுடன் வீட்டையுந் தந்த திருக்குறளை ஒவ்வொருவரும் ஓதி உய்யவேண்டுமென்பது எமது நோக்கமாகும். அதனான் தமிழ்ப் பல்கலைக் கழகப்பதிப்பில், "திருக்குறள் - வீட்டின்பால்" என்பதனை இரண்டாவது மலராக விடுத்தாம். அன்பர்கள் வீட்டின் பாலைக்கொண்டு இன்புறுவார்களாக.

**ஜே. என். இராமநாதன்,**
தலைவர்,
தமிழ்ப்பல்கலைக் கழகப் பதிப்பு நிலையம்.
10, வெங்கடாசல நாயக்கன் தெரு,
கோமளேசுவரன்பேட்டை,
மார்கழி, 1923 மலைச்சாலை, சென்னை.



திரு - ஜே. எம. நல்லசாமி பிள்ளை

உ

சிவமயம்

# திருக்குறள் — வீட்டின்பால்

திருவள்ளுவதேவரின் பெருமையும் அவர் திருக்குறளின் பெருமையும் யாவராலும் அளப்பரிதென எவர்க்கும் தெரிந்ததே. நாயனார் தம் வாய்மொழியானன்றி உலகிற்கு மேலான அறத்தைத் தாமே ஒழுகியும் காட்டினார். துறவறத்தை நன்கு மதித்தும், சில ஞானக் கள்ளர்களைப் போல அத்துறையை நாடாது, இல்லறத்தினின்றுமே பிறவிக்கடலை நீந்தலாகுமென்பதனைக் காட்டி, எந்நிலையினராயினும் தத்தம் நிலைக்குரிய தொழிலைச்செய்து உயிர் வாழ்வதே மேலான ஒழுக்கமென உழைப்பின் பெருமையையும் புகட்டி, யாவர் மாட்டும் அன்பு பூண்டொழுகுவதே மேலான அறமெனவும் காட்டி, மனத்துறக்கமடைந்து தெய்வ பதத்திற் சிறந்து அவருடைய அதீத பக்குவ நிலையை விளக்கி நின்றார். ஓர் ஆங்கிலேய சரித்திரக்காரர், "உலகிற் பெரியோ

ரெனக் கொண்டாடுபவரெல்லாம் சில குற்றம் குறைபாடுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்'' என்றனர். காளிதாசப்புலவரும், 'வெண்ணிலாவிற் களங்கமிருப்பது குற்றமாயினன்றோ, அம்மேன்மக்கள் குற்றமும் குற்றமாகு' மென்றனர். இவ்வுரைகள் உலகியலுக்கு எவ்விதமாக ஒப்பினும், இக்குற்றம் குற்றமேயென, நாயனார் தம்மொபபற்ற புனித வாழ்வினால் நிலைநிறுத்தினார். எவ்விதத் தீங்கினையும் நினைத்தலும் செய்தலுமின்றி, எவ்விதப் பற்றுக்களையும் களைந்து எவ்வுயிரினிடத்தும் அன்பு பூண்டொழுகுவது அருமையினும் அருமையன்றோ? அவ்வித அருமையும் பெருமையுமன்றோ நம் நாயனாரது.

மேல், திருக்குறளின் பெருமையைப்பற்றிப் பேசப்புகின், தமிழ்ப்புலமையில் மிகச்சிறந்தனம் ஜீ. யூ. போப்பையரின் உரை மிகவும் கருதற்பாலது. அவர் இநநூல் எப்பாடையினும் ஒப்புயர்வற்றதெனக் கூறியுள்ளார். இது சாமானிய உரையன்று. இலத்ரோ, லத்தின், கிரீக் முதலிய ஐரோப்பிய பூர்வீக பாடைகளிலும், ஆங்கிலேயம், பிரஞ்சு முதலிய தற்கால பாடைகளிலும் புலமையடைந்தவரும், இந்திய பாடைகளில் அநேகம் தெரிந்தவருமாயுள்ளவர். ஆக அநேக பாடைகள் அரசுரிமை பெற்று நடக்கும் இக்காலத்திலும்,

இத்திருக்குறள் இப்பெரும்புகழ் பெறுமாயின், இந்நூல் பிறந்த காலத்திலேயே கல்விச் செருக் கடைந்திருந்த மதுரைச் சங்கப் புலவர்களாற் போற்றப்பட்டது என்பது ஆச்சரியமன்று. நூலா சிரியர் இழிகுலத்திற் பிறந்தவரென்றது உண்மை யாகுமேல், அவர் மேலும், அவர் திருக்குறள் மேலும் புலவர்கள் பலரும் சொரிந்த புகழும் பெருக்கமடைந்தது. அச்சங்கப் புலவருள் ஒருவர் இந்நூலை வேதமென்றார். மற்றொருவர் அவ்வே தம் போலல்லாது யாவர் வாய் மடுப்பினும் இச் சொல் தன்னாற்றல் குன்றாது பயன்படும் என்றார். ஒருவர் இதனை தேவாமிர்தமென்றனர். மற்றொரு வர் அவ்வமிர்தம் போலல்லாது யாவரும் பருகற் கினியதென்றார். இன்னுமொருவர், "சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த விரு வினைக்கு மாமருந்து" என்னவும், நமக்கு மோகா விற் சுவை யூறுகின்றது. ஒருவர் நம் அகவிருளை நீக்கி மனக்கமலத்தை மலரச்செய்யும் ஞான சூரிய னைக் கூறியுள்ளார். இன்னொருவர், அறம் தகழி யாகவும், பொருள் திரியாகவும், இன்பம் நெய்யாக வும், செஞ்சொற் றீயாகவும், குறட்பா தண்டாகவும் அமைந்து நம்மகவிருளை நீக்கும் விளக்கென்றார். வடமொழியிலுள்ள சில சூத்திரங்கள் போலல் லாது சுருங்கச் சொல்லுதலோடு, ஐயந்திரிபற

விளங்கவைத்தலேயும், சொற்சுவை பொருட்சுவை களிற் சிறப்புற்றிருத்தலேயும் இச்சங்கப் புலவர்கள் பாடியுள்ளார். " சர்வ தர்மங்களும் சர்வ சாஸ்திர விஷயங்களும் அடங்கியிருக்கும் பெரு நூலிதுவே : எல்லாப்பொருளும இதன்பாலுள : இதன்பாலிலாத வெப்பொருளுமில்லையால் " என்னும் வாக்கியத்தால் விளக்கியிருக்கின்றார்.

மேல் கல்லாடர் என்னும் புலவர் இநநூலின் அரியதாகிய ஒரு மேன்மையைப பின்வரும பாட்டாற் சிறப்பித்தனர்.

> ஒன்றே பொருளெனின் வேறென்பர் வேறெனின்
> னன்றென்ப ராறு சமயத்தார்—நன்றென
> வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
> முப்பான் மொழிந்த மொழி.

அஃதாவது, திருவள்ளுவர் வாக்கானது எல்லாச் சாஸ்திரங்களின் சாரமாயும, எல்லாச் சமயிகட்கும் சம்மதமாயுமுள்ள சமரச சித்தாநதமாகும். ஆகவே, அன்று தொடடு எல்லாச சமயிகளும் அவரைத தம்பாலவரெனக் கொண்டு அன்பு பாராட்டி வருகின்றனர். ஆதலால் அவர் வாய்மொழி பொய்யாமொழி யென்பதும், நிர்மலமாயுள்ளதென்பதும், ஒப்புயர்வற்ற நீதி சாத்திரமாயும் சமயசாத்திரமாயு முள்ளதென்பதும் பெறப்படும்.

மேலித திருக்குறள் அறம், பொருள், இன்பமென முப்பாலாக வகுத்துளது. இம்முப்பாலின் திறத்தைப்பற்றித் தமிழினும் ஆங்கிலேயத்தினும் பண்டிதர் பலர் அநேகமாகப் பேசியிருத்தலின், அவற்றைப்பற்றி ஈண்டு விசாரியாது விடுத்தாம். ஆயின் இங்கு எடுத்த விசாரணை தான் என்னையெனின், திருக்குறளின் வீட்டுப்பாலைப் பற்றியேயாம். என்னை? ஆன்றோர் பலரும் இது முப்பால் நூலென்று கொண்டிருக்கவும், வீட்டுப்பாலும் இதன் கண் உளதென்பதற்குச் சான்றென்னையெனின், முற்கூறிய சங்கப் புலவர்களே, நம் நாயனாரை "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்" ஆகக் கொண்டிருக்கின்றனர். இன்னும், "அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கின் திறந்தெரிந்து செப்பியதேவர்" என்றும், "அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின் திறனறிந்தேம் வீடுதெளிந்தேம்" என்றும் கூறியுள்ளார். ஆகவும் துறவறமாகிய காரண வகையா னன்றி இலக்கண வகையால் வீட்டைப்பற்றிக் கூறிற்றில நூல்கள் என்று பரிமேலழகர் கூறியதனால் துறவறத்துள் வீட்டினைப்பற்றிக் குறிப்பாகக் கூறினர் என்பதும் தெளிக. வீடென்பது "சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்து" என்பதை ஒப்பினும், அவ்வீடென்பதும் ஒன்

றுண்டோ, வீட்டையவன் எவன், வீட்டையும் வழி யாது என நிகழும் வினாக்களுக்கு விடை பகரும் நூல்களே ஞான சாத்திரமாக யாவருங் கொள்ளுகின்றனர். ஆகவே இவர் விஷயத்தில் நம நாயனாரின் கருத்து என்னையெனக் கொஞ்சம் கூர்ந்து விசாரிக்கப் புகுவாம். அவர் கருத்தும், "கடவுள் வாழ்த்து" என்னும் முதலதிகாரத்தி லும், "நீத்தார் பெருமை" யென்ற மூன்றா மதி காரத்திலும், "நிலையாமை," "துறவு," "மெய் யுணர்தல்" என்னுமதிகாரங்களிலும் கிடக்கக் காணலாம்.

மேல இம்முதலதிகாரம் கடவுள் வாழ்த்தாகக் கூறினும், இதிற் கடவுள் துண்மையும், அவனது இலக்கணமும், வீட்டைய விரும்புவா னிலக்கண மும், அடையும் வழியும் விரித்துக் கூறியுளது. முதற்குறளில், கடவுள் தான் உண்டோ என்னும் ஆசங்கையை நீக்க, "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்னும் மொழிகளாற் 'காணப்பட்ட தாகிய உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட் டிருக்கவேண்டும்' என்னும் நியாய வாயிலாக நிலை நிறுத்தினர். இன்றுவரையும் உள்ள நூல் களிற் கடவுளதுண்மை கூறற்கு இந்நியாயந்தான் விசேடித்ததாயிற்று. இவ்விஷயமே, சிவஞான போத முதற்சூத்திரத்தினும், பிரம்ம சூத்திரம்

இரண்டாமவற்றினும் விஸ்தரித்துள்ளது. ஆதி யென்ற சொல்லானது உலகத் தோற்றத்தின் மேற்று, கடவுள் ஆதியுமந்தமும் இல்லாதவனுகை யால்; "போற்றி யருள்கநின் னாதியாம் பாத மலர்" என்றதினும், ஆதியென்னும் சொல் பக வானின் சிருஷ்டி கிருத்தியத்தையே விளக்கி நின்றது. உலகு என்னும் சொல் உரைகாரர் கண்டுயிர்கண் மேனின்றது என்றாராகலின், ஆதி பகவன், உலகு, உயிர்கள் என முப்பொருள் உண் மையும் பெறப்பட்டது. இம்முப்பொருள்களில், கடவுளது முதன்மை கால இடவரையறையின்று என்பதனை ஓர் உவமை வாயிலாக விளக்கிக் காட்டினார். இறைவன் அகரம் போலுமுயிர்: உலகுயிர்கள் மெய் போலும் உடல்: உலகுயிராகிய இருபொருள்களும் இறைவனுக்கு உடலாகும் தன்மையானே உலகென ஒன்றுபடுத்திக் கூறினார். இவ்வுவமான வாயிலாய், இறைவனுக்கும் உல குயிர்களுக்கும் உள்ள சம்பந்தம் இனைத்தெனக் காட்டினார். இறைவனும் உலகுயிர்களும் ஒன்றோ, இரண்டோ, அன்றோ என்னும் வினக்களுக்கு ஒன்றென்றும்; இரண்டென்றும்; அன்றென்றும் கூறுமல், அவற்றின் சம்பந்தம், உயிர் மெய் யெழுத்துக்கள் போலாமென்றனர். இச்சம்பந்த மும் என்னையெனின், உயிரெழுத்தும் விகாரத்

தானன்றி, நாதமாத்திரையாய் இயல்பாற் பிறந்து தானே ஒலிக்கும் வலியுளது. மெய்யெழுத்தோ தான் இயற்கையானன்றி, உயிரோடு கூடி மட்டும் ககப்பெறும். அஃதாவது "அ ஆ" முதலிய உயிர்கள் தாமே ஒலிக்கலாம்: ககரமுதலிய எழுத்துக்களை ஒலிக்கப்புகுங்கால்: க (க + அ) என்றேனும், இக என்றேனும் ஒலிக்கலாமேயன்றி அகர, இகரங்களை விடுத்து ஒலிக்க இசையா. அம்மட்டன்றி, உயிரெழுத்தினின்றும் மெய் பிறந்ததாகக்கொள்ள எவ்வித ஏதுவுமின்று. அகரத்தினின்றும் ககர சகரங்கள் எக்காலத்தினும் ஒலிக்கா. ஆகவே உயிர் மெய்யெழுத்துக்கள் ஒன்றோ வேறோ, என்னும் வினா நிகழ்த்தும்போது, ஒன்றெனின், உயிரினின்றும் மெய்பிறக்க வேண்டும்: வேறெனின், தானாகவே ஒலிக்கவும் வேண்டும். ஆகவே இவை ஒன்றுமன்று: இரண்டுமன்று. ஒன்றாகாமல், இரண்டாகாமல், ஒன்றுமிரண்டுமின்றாகாத சம்பந்தம் வேறேனும் உளதோ எனின், அச்சொற்களே அப்பொருள்களை விளக்கும். உயிர் என்னும் சொல்லே ஆன்மாவிற்கு உரிய பெயராகவும், நமதுடலே மெய்யாகவும், இவ்வுடலுயிர்ச்சம்பந்தம் இன்னதென அறிந்த பரமஞானியே தமிழ்வகுத்த அகத்தியனாராகவும், அவர் இவ்வுடலுயிர்ச்சம்பந்தம் இவ்

வெழுத்துக்களிற் கண்டுணர்ந்து அவைகளுக்கிட்ட பெயராகும். அத்தமிழை அ - உயிர், க - மெய் யெனக் கற்கப்புகும் பாலனுமதலையும், ஞானசாத்திரத்தின் முதலெழுத்துக்களைக் கற்பவனுவன்.

மேல் நம்முடலுயிர்ச் சம்பந்தமுமே என்னை யென விசாரிக்கப்புகின், இவ்விஷயம் சைவசித்தாந்த சாத்திரங்களினன்றி யேனை நூல்களிற் விஸ்தரிக்கக் கண்டிலம். ஆனால் பேயன் என்னும் பண்டிதர் தாம் எழுதிய 'உயிர் உடல்' (Mind and Body) என்ற நூலிற் பின்வருமாறு சித்தாந்தப்படுத்தியிருக்கின்றார்.

"இடங்கொண்ட அசத்துடன் உயிர் ஒன்று யிருக்கக் கண்டோம். ஆயினும், உயிர் உண்மையில் இடங்கொண்ட பொருளன்று. ஆகவே இடங்கொண்ட அசத்துடன் சேர இவ்வரிதாகிய சம்பந்தத்தைக் குறிக்கும் சரியான பதம் கிடைப்பது கஷ்டம். சரியான உபமானமும் கஷ்டம். மற்றெல்லாச் சம்பந்தங்களையும் நோக்க, இந்தச் சம்பந்தம் விபரீதவிரோத சம்பந்தமாயிருக்கின்றது."

எனினும் நம்மான்றோர் இவ்வுடலுயிர்ச் சம்பந்தத்தைக் குறிக்கவே, உயிர் மெய்யெழுத்துப மானத்தைக் கைக்கொண்டனர். பேய்ன் பண்டிதர் கண்ட வண்ணமே நம்மவர்களும் இச்சம்பந்தமும் ஒன்றாகாம லிரண்டாகாமல் ஒன்றுமிரண்டு

மின்றுகாமலென்ற, விபரீதமும் விரோதமுமாகவே காண்கின்றார்கள். எனினும் இப்பொருள்களை ஒன்ருகவும் இரண்டாகவும் எண்ணவும் கூடும். இச்சம்பந்தத்தை விளக்கச் சரியான சொல் ஏற்படாவிட்டாலும், இஃது உண்மையாமென யாவரும் அங்கீகரிகக்கற்பாலதன்றோ? ஆதலாலன்றோ நாயனார் கூறிய வுண்மையும், சர்வ சாஸ்திரஸாரமாகவும், சமரசஞானமாகவும் கொள்ள இடமுண்டாகிறது.

ஆகவே : இறைவன் உலகுயிர்களின் சம்பந்தம், நமமுடல் உயிர் போன்றும உயிர் மெய்யெழுத்துப் போன்றுமுள்ளது என்பது திண்ணம். இதனுண்மை, மெய்கண்டதேவரது "அகர வுயிரின்றேல் அககரங்களின்றும்" என்னு மூதுரையை மனதிலழுதத இன்னும விளங்கும். ஸ்ரீ கண்ட சிவமும தம பாடியத்தில் உலகுயிர்கட்கு இறைவன் உயிராம் தன்மையை விளககியிருபபதைச் சித்தாந்ததீபிகை 5-வது புததகம 95-ம் பக்கம் காண்க.

மேலும் உயிர் மெய்யாகாது — மெய் உயிராகாது எனினும, உயிரன்றி மெய்பிறவாது மெய்யுடன் உயிர்பிரிவின்றி நிற்றலும் காண்கின்றோம். இதனல், இறைவன் சூக்கும லக்ஷணமாகிய "ஒன்றா நீ யல்லே யன்றி யொன்றில்லே" என்பதும் விளக்கியதாமென்க.

இறைவன் உயிரென்றதினாலும், படைத்தல், ஆக்கல், அழித்தல் முதலிய தொழில்வன்மையாலும், அவன் இயற்கையறிவுடையவன் முற்றறிவனென்பதும் பெறப்பட்டது. அதுகொண்டே உலகுயிர்கள் அவன் சந்நிதியில் அறிவற்ற அசேதனம்போலும், அசைவித்தாலன்றி அசையா, அறிவித்தாலன்றி அறியா எனவும் ஏற்பட்டன. இக்கருத்தை வலியுறுத்தும் பொருட்டே, இரண்டாம் குறளில் இறைவனை 'வாலறிவன்' எனவும் இறைவனை வாழ்த்தி வணங்கி அருள் பெறாத உயிர்களின் கல்வியறிவைப் பயனற்றதாகவும் குறித்தார். கல்வி யறிவின் பயனும் அவனை யடைய வேண்டுமென்பதும், 'தாள்' என்றசொல்லால் அவனது பெருமையும் நமது சிறுமையும் பெறுதும்.

மேல் அவன் முற்றறிவனாகவும், நாம் சிற்றறிவுடையேமாகவும் அவனை நாமறிந்தடைவதெப்படியெனின், இறைவனின் மற்றொரு தன்மையினால் அஃது எளிதாம். அன்பே இறைவன். அன்பு வேறு, இறைவன் வேறன்று. ஆகவும் அவன் நினைப்பவர் மனமே கோயிலாகக்கொண்டு வசிப்பவன். 'ஏகினான்' என்ற பதத்தினால், இறை பணி நின்ற அன்பர்களுக்கு அவர்கள் நினைப்பதன் முன்னமே அவன் விரைந்து சென்று அருளுமாறுங் கண்டாம்.

" பாரார் விசும்புள்ளார் ..ஆராலும்
காண்டற்கரியன் எமக்கெளியன் ",

என்பன மறைமொழிகள்.

மேலே எங்கே அன்பு விளையுமோ, அங்கே ஆனந்தம் பிறக்கும். அன்பில்லாத விடமும் ஆனந்த முண்டாகுமோ? இறைவனே ஆனந்தனாகவும் ஆனந்த சொரூபனாகவும் சொல்லி, அவன் சம்பிடத்தில் அன்பு அலைந்து அருளைச் செலுத்த இயலாதவர் எவருமே இருந்தாலும் பொருந்துமோ? இறைவன் சமீபத்தில் அருளைப் பெற்று, யாம் அனுபூதி பெற்றும் அவன் கடைத்த ஆனந்தத்தை பின்னும் நினைக்கு களாயும் கனவு விரைந்தார்

" சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனை ",

" உள்ளப்படாத திருவுருவை யுள்ளுதலும்
கள்ளப்படாத களிவந்த வான்கருணை ",

" தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ ",

' உருகிப்பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலை ',

அவன் முற்றறிவுடையனாதலின், நாமவனை அளந்தறிவது இயலாதாகும். மேலும் நம் தற்போதத்தை முன்னிட்டு அறியப்புகின், இன்னும் அசாத்தியமாகும். நான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களை நீக்கி இறைவன் பால் உள்ளன்போடு முருகி மெய்சிலிர்த்து நிற்பார், அவனை அருளாற் பெறுவது எளிதினும் எளிது. உமாபதி சிவமும் அவனித்த அன்பும் இன்றுண்டேல், இன்றே அவனை நீளப் பெறலாகுமென்றார். நன்முயற்சி எவ்வித்த்தினும் வேண்டபாயினும், அவன் அருள் முன்னர் வேண்டுமென்பது 'ஏகிஞன்' எனனும் பத்ததிறைல் மீண்டும் விளங்கும்.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி",

"தப்பாமே தாளடைந்தார்
நெஞ்சுருக்கும் தன்மையினானை",

"அன்பர்க்கு மெய்யனை அல்லாதார்க்கு அல்லாதான்",

"நினைப்பரிய தனிப்பெரியோனை",

"தேவர்களே, நாலே நுழைவரியான்
நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பாந்துருக்கும் பாவகத்தால்",

"தேவர்க்கும், தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை,
யுருக்கும் பணிகொள்ளும்",

" ஞானக் கமெம்பின் றெளிவைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினனைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்டான்."

இருவர் அறிவினால் ஒன்றப்படுவது கூடாதாகும். அன்பே ஒருவரை ஒருவர் ஒன்றுபடுத்தல் வல்ல, ஆயின் ஒருவர் ஒருவரை அறிந்தால் தான் அன்பும் பிறக்கும். பூர்வ புண்ணியத்தினால பார்த்தலுமே அன்பு விளைவதும் உண்டு. " கண்ணபன் ஒப்பதோர் அன்பின்மை " என்றதும் அதுபற்றி அன்பின் முன் கீழ்மேலில்லை. வலியார் எளியார் இல்லை. சாதிகுலமில்லை. நான் எனதென்பது மிலலை. தற்சுகம பாராது பிறர் துன்பம் தானே வகிக்கும். பிறர் நன்மையே நாடும. பிறர் மேல் தீங்கு நினையாது. எல்லாமிருந்தும் உள்ளன்பில்லாவிடில் வற்றல் மரமா மன்றோ.

ஓர் ஐரோப்பிய தத்துவ ஞானி, " சூரியனைப போலும் இறைவன்; அவனையறிவது கூடாது; அவன் நுண்ணிய ஒளிக்கிரணங்களே அவனது அருள், அவ்வருளொளியாலே மட்டும் நாமவனை யறியலாம் " என்றார்.

மேல் அவன் அகண்ட ஞானமுடையவனாகவும், சால அன்புடையனாகவு மிருக்க, உயிர்கள் பிறந் திறந்துழன்று துன்பத்தில் ஆழ்ந்து அவதிப படுவதேன்? இவ்விதந் தோற்றுவித்தல் முதலிய வைகளை யேன் செய்யவேண்டுமெனில், இறைவ னது செய்கை பயனற்றதுமன்று: தன் பொருட்டு மன்று; பிறர் பொருட்டே: அவன் தனக்கென்று வேண்டுதல் வேண்டாமையிலனாகையின். உயிர் கள் இடும்பையுட்பட்டு நிற்பவர்கள் ஆகையால், அவ்விடும்பை யொழிதரும் பொருட்டே இப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வதும் ஆகும். இறைவன் என்றும் சலமில னாதற்கும் உயிர்கள் சஞ்சலத்துக் குட்பட்டதற்கும் ஏது, இத்திருக்குறளினால் விளங்குகின்றது. அஃதா வது இறைவன் விருப்பு வெறுப்பற்றிருத்தலும்; உயிர்கள் விருப்பு வெறுப்புற்றிருத்தலுமே. உயிர்கள் தங்கள் சிற்றறிவால் தங்களுக்கு என்று மழியாத வின்பங்கொடுப்பது இன்னதே எனத் தேர்ந்து கொள்ளாமல், தாங்கள் செய்யவேண்டிய கர்மங்கள் துன்பத்தைத் தருவதாயின் அவைகளை விலக்கி, அல்லாத கர்மங்கள் தற்காலம் இன்பம் தருவதாயின் அவைகளைச் செய்யவே புண்ணிய பாவங்கள் விளையும். விளைதலும் “இருள்சேரிரு வினையும் பற்றும்: பற்றலும்” அடிக்கடி பிறந்

துறந்துழலப் பிறப்பின் பிணியறும். ஆகப்பிறப்
பின் பிணியறுவதற்கு வழி யாது எனின், இரண்
டுண்டு. அவையாவன :—இருவினை யொப்படைத
லும், பற்றற்றான் பற்றினைப் பற்றலுமே. வேண்டு
தல் வேண்டாமை யுடைமையும், இன்மையுமே
உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள கண்கூ
டான பேதம். தேவர்கள் வறுமையிற் றுன
புற்று, பொருளை நாடி, திருப்பாற்கடலைக் கடை
யும்போது, மலையிலுங் கடலிலும் உள்ள சராசர
மாகிய உயிர்கட்கு விளையும் துன்பத்தைக் கருதி
னார்கள் இல்லை. உயிர்க்கொலை செய்தலே பாவ
மாகையால், அப்பாவமே விஷமாகத் திரண்டு
அவர்களைத் தீய்த்தது. அதில் வெறுப்புற்று
வருந்தி நின்று இறைவனை நோக்கி ஓலமிட்டழு
தார்கள். உயிர்கள் தங்கள் சுய நன்மையை
நாடிச் செல்லும்போது தெய்வத்தை நினைப்பது
வழக்கமில்லை. மிடிவரின் 'ஐயோ தெய்வமே
இப்படி என்னை விட்டு விட்டாயே' யென்று
கதறுவது. இறைவன் தாயினுமிக்க அன்புடைய
னாதலின், அவன் அவர்கள் அழுகைக்கு இரங்கி,
தற்போதத்தால் விளைந்த பாவத்தைத் ஏற்றுக்
கொண்டு, அவர்கள் இடும்பையை நீக்கி, தான்
பற்றற்றான் ; எவ்விதப் பற்றுக்களும் தன்னைப்
பற்றாவென்பதையும் விளக்கித் தன் பாதத்து

வந்ததை நிலை நிறுத்தியவாறுங் காண்க. வேண்டுதல் வேண்டாமையாலேயே இருவினை யுண்டாகிய வாறு ஆதாம் ஏவாள் சரித்திரத்திலும் விளங்குவதாம். (Tree of knowledge of good and evil) நல்லது தீயதென் றுணரும் மரம் என்னுந் தலைப்பின் கீழ் எழுதிய வியாசத்திற் கண்டு கொள்க.

மேற் சொல்லிய போந்த விஷயாதிகளால் இக் குறட்கும், பின் வரும் 'இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' என்னும் குறட்குமுள்ள சம்பந்தங்களை ஊகித்துணர்க.

நாம் விருப்பு வெறுப்புற்று அயர்தலும், ஐம் புலவேட்டை வழியாகலின், ஐம்பொறி வாயில்களை யவித்தவுடன், இருவினையும் நம்மைப் பற்றாது பரி சுத்தர்களாவோம். ஆக, இருவினை யொப்படைந்த வழி மலபரிபாக மெய்தலும் பெறும். இறைவன் அநாதியே மலத்தினின்றும் நீங்கி நின்றான் என்பது ஆறாந் திருக்குறளாற் பெறும். அவன் வழியே நிற்கவும், நம் வினைகள் அறும் என்பதும் பெறும்.

ஆயின், உலகில் அநேக கடவுளர்கள் உண்டே, அவர்களை யெல்லாம் வழிபடல் நன்மை பயக்

குமோ, என்னும ஐயத்தை நீக்குதற கெழுந்தது, ஏழாந் திருக்குறள். வறியர் வறியரிடததுச் சென் றூற் பயனென்? ஐசுவரிய முடையவனிடததிற் சென்றாலன்றே தன் வறுமை மாறும; அது போல, ஒபபுயாவற்ற சாவ ஐசுவரியமுமுடைய ஏகநாயகனிடத்திற் சென்றடைநதாலன்றே நம மனககவலையறும. கண்ணனும் கீதையில் சோகம பாவனையாய், "அநதநதக் கடவுளர்களை யடைநத வர்கள் அவரவர் உலகததை யடைகின்றார்கள். என்னை யடைநதவர்கள் பிரமம நிர்வாணததை யடைகின்றார்கள்" என்றது, இககாரணம பற றியே யன்றே. உயிர்ககிரஙகி அருள்சேவ, அவன் அநதணன் (கருணைககடல) ஆகின்றான் எனினும, அவன் பக்ஷபாத மிலலாதவனென்பது 'அற வாழி' எனபதனுற் பெற்றும. "சலமிலன் சஙக ரன்" என்றார் பிறரும.

மேல் விரிததுக்கூறிய இறைவனது மாட்சிகளை எண் குணபாக வகுததுக காட்டினார்; அவை வருமாறு — தன் வயததனாதல் (சுவதவனே என்றது இருக்கு), தூயவுடமபினனாதல, இயற்கை யுணாவினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசஙகளினீஙகுதல், பேரருளுடைமை, முடிவி லாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை என் பனவாம்.

இக்குணங்களை யுடையவனே இறைவன் என்பதும், அவனடிச் சாராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தாரெனவும், சேர்ந்தவர் நீந்துவர் எனவும் ஆசிரியர் கடைப்பிடித்தார். மேல், உயிர்கள் சிற்றறிவுடையராதலும், அதனால் வேண்டுதல் வேண்டாமை யுடையராதலும், அதனால் இருவினைப் பற்றுத்தொடர்பு உண்டாதலும், அதனால் பிறப் பிறப் புண்டாதலும், உண்மையாக அப்பற்றறுப் பற்றற்றான் பற்றினைப்பற்றின் அல்லாது, பற்று விடாதென ஆசிரியர் கருத்தை மேல் விளக்கிக் காட்டுதும். ஆகப்பிறவித் துன்பத்துக்கு முதற் காரணமாயுள்ளது உயிர்களது சிற்றறிவேயாம். இதனையே, அறியாமை, அஞ்ஞானம், அவித்தை யல்லது அவிச்சை, மயக்கம், மருள், ஆணவ மெனப் பல சொற்களாற் கூறுவது. இவ்வறியாமையின் தன்மை என்னெனின், இதுதான் பொருளல்லவற்றைப் பொருளென் றுணரலாம். பொருள்களை அதனதன் தன்மை யினைத்தென அறிதல் அறிவாம். ஒன்றை மற்றொன்றாகவும் சந்தேகமாகவுங் கோடலே அறியாமையாகும். இவ்வாறையந்திரிபினால் தான் எல்லாத் தீங்குகளும் விளைகின்றன. ஆசிரியர் "பொருளல்லவற்றை" என்றது, "பொருளில்லவற்றை" எனின், பொருள் வேறுபட்டு, மருட்சி கொள்ளற்குக்

காரணமாதலும காண்க. ஆசிரியர் கருத்து, உயிர் உடல்களை இல்பொருளாகக் கொள்வது அறி வின்றி, உடலை உயிராகவும், உயிரை இறைவனக வும் கொள்ளுதலும; இதிலேயப படுதலுமே அறி யாமை என்பதாம். உலகர் "இறைவன் உளன்" "இறைவன் உளன்" எனக் கததிக கதறினும, அவர்கள் உண்மையான கடவுளாககொண்டது தஙகள் உடலேயேயாம. ஒருவன் காலையிற் படுக் கையினின்று எழுந்தது முதல இரவிற படுத் துறங்கும வரை செய்யும முயற்சிகளைக் கணக் கிட்டு ஆராயின் அவைகள் எலலாம தன் உடலைககாககும வழிமுறைகளாம. வேறு உயி ரிருப்பதாகவும தோன்றுத துணையாகிய கடவு ளிருப்பதாகவும நினைப்பில்லை. நினைப்பிருப்பி னன்றோ, அவற்றைப் போறறும வழி தேடுவன். தேடினன்மற, பிறவிப்பிணியும அறும.

இவ்வறியாமை நீங்கியபின் அடைவதென்னை? தான் அறககெடாமல் அடைகின்றவன் தானு முண்டோ? என ஐய நிகழ்ததினர்க்கு, இருள் நீஙகியபின கதிர ஒளி பெறுதல் போல, அறி யாமை நீங்கி, இறைவனருள் பெற்று வரம்பி லின்பத்திலாழ்தல அமையும். கதிரவனன்றி இருள நீங்குதலும ஒளியுண்டாதலும் அமையாதாகலின், இறைவனன்றி அறியாமை நீங்குதலும, இன்பம்

பெறலும் அமையாது. முதலதிகாரத்தில் 3-முதல் 10-வது வரையுமுள்ள திருக் குறள்களிலும் "பற்றுக பற்றற்றான்" என்ற குறளிலும், "இருள் நீங்கி யின்பம் பயக்கும்", "பிறப்பென் னும் பேதைமை நீங்க", "சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்" என்ற திருக்குறள்களிலும் பதி ஞானமின்றிப் பாசக்ஷயம் பெறுதல் அமையாதென வும், உயிர்கள் உய்வெய்தும் பொருட்டு ஈசுவரன் ஒருவன் நிச்சயமாக வேண்டுமென்றும், ஆசிரியர் வெளிப்படுத்தி நின்றார். இதைப் பின்னும் வலி யுறுத்தும் பொருட்டேயன்றோ எதிர்மறையான்,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

என்று மொழிந்தார். அஃதாவது ஒருவன் புலன் வழிகளை யெல்லாம் அடைத்து, சுத்தமாய், அறவாழி அந்தணனை, தாரணைக்கணின்று, இவ் வெய்துதற்கரிய இந்நிலையில் நின்றும், பதிஞான மில்லாவிடின், அவன் வீடுபேற்றையடையான் என்பதே. இந்த விஷயத்தை மிகவும் ஆழ்ந்து கவனிக்கற்பாலது. ஏனெனில் இக்காலத்து ஐரோப்பாவிற் பெரும்பாலும் தம வயத்ததாய வழியே போதுமென்னும் பூர்வபட்சமதம் மிகவும் பிரபல மடைந்திருப்பது மிகக்காணக்கூடும். இம்

மதமும் ஒருகாலத்து இந்தியாவிலும் பரவியிருந்து பின் முற்றிலும் ஓட்டப்பட்டது. இதன் முன் ஓடிப்போன இம்மதம் பின்னும் ஈங்குத் தலையெடுக்க ஏது உண்டாயிருக்கிறது. இவ்விஷயங்களை யாம் "புத்தமத விசாரணை" யென்னும் வியாசத்தில் விரிவாக வரைந்திருப்பதால் ஈங்கு இம்மட்டில் விடுத்தாம.

மேற்கூறிய மெய்யுணர்வென்னையெனில், நிலமுதலாயி ரிருகிய தத்துவங்களின் உண்மைகளையும், அவைகள் காரணகாரிய சம்பந்தமுடைய வென்றும், நிலைபேறுடைய வென்றும் தெளிந்து, காரணங்களெலலாம கடந்து நின்ற அகாரணமாகிய முதல்வனை இததத்துவங்கள் எல்லாவற்றிலும் காண்பதே. உளளது, மெய்ப்பொருள, செம்பொருள் என்பன தோற்றக கேடுகளின்றி நித்தியமாய், நோன்மையாற்றன்னை யொன்றும காத்தலின்மையிற் றாய்தாய், தானெல்லாவற்றையும் கலந்து நின்றும் தான் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாய் நிற்கும் முதற் பொருளாகிய பரம்பொருளை யுணர்த்திற்று.

இம்முதற் பொருளை யடைதற்குச் சிறப்பு வகையான மூன்றுபாயங்கள் கூறுகின்றார். அவை தாம் கேட்டல், சிந்தித்தல், காண்டல் என்பன இவை மூன்றும். 36-வது அதிகாரம் 6, 7-வது

குறள்களால் அருளிச் செய்கிறார். இவற்றில் காண்கையாவது, உயிர் தன் அவிச்சை கெட்டுப் பரமசுகத்துடன் ஒற்றுமையுற இடைவிடாது அப் பரம்பொருளைத் தானாகப் பாவித்தல். என்னை? ஒன்றினைத் தானாகப் பாவிக்க அந்நிலைமை வந்தெய்துவது எப்படியெனில், கூறுதும். உயிர்களுக்கு இரண்டு குணங்களுண்டு. அவை தாம் பற்றின்றி நில்லாததும், அது அதுவாதலும் ஆம். அஃதாவது தானெனத் தனித்து நில்லாது, கட்டையில் அக்கினி போலவும், அல்லது வடத்தில் ஊஞ்சல் போலவும், அல்லது கொம்பிற் பழம் போலவும் பற்றின்றி நில்லாது. அப்படி நிற்பின் யாதொன்று பற்றின் அதனியல்பாய் நின்று தானென வேறாய் விளங்காது. ஆகவே உடலுடன் கலந்தபோது உடலாகவும், கடவுளுடன் கலந்தபோது கடவுளாகவும் காணப்படாது நிற்கும் உயிர். அதுபற்றியே, ஒரு சாரார் உடலினைச் சோதித்து உயிரைக்காணாது ஏங்கியும், இன்னொரு சாரார், கடவுளைச் சோதிப்பதுபோற் சோதித்து உயிரைக்காணாது மயங்கியும் உயிரெனப்படுவதொன்றில்லை யெனப் பொய்யுரை கூறி யுழன்றார். இத்தன்மையால், அதை பளிங்குக்குவமை கூறியுள்ளார். 'பந்தமறும் பளிங்கனைய சித்து நீ', 'அடுத்தது காட்டும் பளிங்'

கென்றார் நம்மாசிரியரும். நம்மவர்களன்றி, கிறிஸ்து மதத்தில் மிகவும் பேர்போன என்றி டிரம்மண்டு பண்டிதரும, "எல்லா மாந்தரும் பளிங்குகளாவர். இத தன்மையானே, அது அது வாதல் சித்தித்ததாகும். மனிதனுக்கு மிகவும் ஒற்றுமையான உவமானம அவன் பளிங்கென் பது" என விளக்கினார். மாசு படிந்த பளிங்கா னது பந்தம் அற அறத்தன் ஒளியை மிகுதியும் பிரதிபலிக்கச் செய்து, பநதம முற்றும அறவே, அதன் ஒளி பூரணமாய் விளங்கி, அப்பளிஙகைப பார்க்க வொண்ணாது அதனை மூடி நிற்கும. பர மாசிரியரும், இருளாயிரு, கண் (கண்ணும பளிஙகே) ஆகிய திருட்டாநத வாயிலாய், "சென்று சென்றணுர்வாய்த தேய்ந்து தேய்நது ஒன்றும" என்று திருவாய்மலாநதருளிய தூஉம் இவ்வுண்மையே. டிரமமெண்டு பண்டிதர் இத் தன்மையை, (Laws of reflection and assimilation), பிரதிபலிததல், ஒன்றுகுதல் என் னும விதிகளாகக கூறியுள்ளார். அஃதாவது "நான் அதைக் கண்டேன், அதை என்னி டம் தோற்றுவிததேன், அதுவானேன்" என்ப தாகும்.

பின்வரும் சுவேதாசுவதர உபநிடத வாக்கியங் களையும் கவனிக்கவும்.

"அவனை நினைந்து, அவனுடன கூடி, அவனுடன் ஒன்ருகவும், முடிவில மலமாயை யின்ருமே;"

"மாசு படியும கண்ணுடியானது துலக்கவும் ஒளி பெறுதல போல, தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை யறிந்தவுடன் மனக் கவலை நீர்ந்து இன்பததை அடைகின்ருன். விளக்கைக் கொண்டு பார்ப்பது போலத் தன் ஸ்வரூபத்தைக்கொண்டு பரம்பொருளின் உண்மையை யறிகிருன். என்றும் உள்ளதாகிய, பிறப்பிலியாகிய எல்லாத் தத்துவங் களையும் கடந்துநின்ற கடவுளை யுணர்ந்ததும், எல்லாப் பாசங்களினின் றுமே நீக்கமடைகின்ருன்."

இவ்வுண்மைகளெல்லாம் சந்தான குரவரும் பின்வருமே விருத்தப்பாவிற் ருெகுததுக் காட்டிய துங் காண்க.

கண்டவிவையல்லேனுனென் றகன் றகாணுக்
கழிபரமுநானல்லேனெனக் கருதிக்கசிந்த
தொண்டினுெடுமுளத்தவன்ருனின் றகலப்பாலே
சோகமெனப்பாவிக்கதோன் றுவன்வேறின் றி
விண்டகலுமலங்களெல்லாங்கருடதியானத்தால்
விடமொழியுமதுபோலவிமலமதையடையும்
பண்டைமறைகளுமதுநானுனேனென் று
பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே.

ஆகவே, சித்தாந்த மென்னை யெனின், உலக மானது மூவினைப்படுதலின் ஒருவனால் உண்டாக்கப்பட்டதெனவும், அவனும், முடிவிலாற்றலும், முற்றறிவு முடையவனாக வேண்டுமெனவும், அவனே அன்பாகவும், தனக்கென ஓரிச்சை யில்லாதவனாகவு மிருத்தலின், அவன் செய்யும் படைத்தல் முதலிய தொழில்களும் உயிர்களை மூடிய அழுக்கைப் போக்கற் கென்றும், இறைவனும், உயிர்களும், உயிர் உடல்போல், ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றுமிரண்டு மின்றாகாமலிருப்பன வென்றும், உயிர்களும் தங்கள் அறியாமையாகிய பாசத்தை யகற்றிக்கொள்ள வேண்டுமாயின், நான எனதென்னும் பற்றுக்கள் அறவும், வேண்டுதல் வேண்டாமை யறவும் வேண்டுமெனவும், தனக்குண்மையான பற்றுக்கோடு ஒப்புயர்வற்ற அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை யெனத் தேர்ந்து அவனிடம் அயரா அன்பினைச் செலுத்தி அவனடிச்சேர்ந்து இறைபணி நிற்கின், அவனை மலம மாயையாகிய வல்வினை நோய்கள் சார்தரா: அவ்வினை யடைதற் குபாயங்களும், கேட்டல் நினைத்தல் பாவனையாகிய சரியை, கிரியை, யோக, சமாதிகளெனவும் ஆசிரியர் கூறிப்போந்தார்.

மேலதுவே, நமது சிற்றறிவினால் அளந்தபடி வீட்டு விஷயத்தைக் குறித்து ஆசிரியர் கருத்தா

கத் தோன்றுகிறது. இவ்விதமாக விரித்துக்காட்டிய உண்மையில் யாவருக்கும் சம்மதமாயிருக்குமென்பதெமதெண்ணம். ஆயின், ஒரு மதம் எம்மதத்தவருக்கும் சம்மதமாயிருக்குமோ என ஆசங்கை நிகழுங்கால், எல்லா மதங்களின் சாரமாயும் சமரசமாயுமுள்ளது சாலும். நமமிலும், அவ்வித மதம் உண்டெனவும் துணிவாம். அம்மதம், கண்ணாடியானது பார்ப்பவர் முகத்தையே காட்டுவிக்குமாறு போல், எவரும் பாராதவுடன் தங்கள் தங்கள் மதமாமெனக் கொள்ளுகின்றார்கள். ஐரோப்பிய பண்டிதர்களிலும், நம் வடமொழியிலுள்ள சிற்சில நூல்களைச் சாங்கிய நூலாகவும், யோக நூலாகவும், அத்துவித நூலாகவும் பலவாறு கூறினார்கள். தற்காலத்துப் பண்டித சிரோமணிகளாகிய மகடன்னல, கார்பே என்பவர்கள் கருத்து, அந்நூல்களிற் கூறிய வுண்மை சாங்கியம், யோகம், துவைதம், அத்துவைதம் முதலியவையன்றி இவைகளின் சாரங்களெல்லாம் அடங்கிய சமரச நூல்களாகும் என்பதே. இவ்வித சமரச சித்தாந்தமடங்கிய நூல்களாகவும் கொண்டது சுவேதாசுவதர உபநிடதமும், பகவற்கீதையுமே; தமிழில் நமது திருக்குறளைச் சொல்லலாம். அவ்வித சமரச நூலாகவே கல்லாடர் முதல் வந்த ஆன்றோர்களாற் கொண்டாடப்பட்டு

மிருக்கின்றது. எல்லா மதத்தவர்களும் அதனைத் தழுவுவதும் அதுபற்றி, விரிவஞ்சி இம்மட்டே விடுத்தாம்.

திருவள்ளுவநாயனாரின் திருவருளால் தமிழ்நாடு நீடித்து வாழக்கடவதாக:

dramany

S P ʃ

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

The Sadhu Press, Madras